**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

மறுபக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு டெலெக்ஸ் மூலமான பண அனுப்பீட்டை மேற்கொள்ளும்படி வங்கிக்கு வேண்டுகோள் விடுக்கும் நான்/நாம், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையவே அது செய்யப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம்:

1. முற்றிலும் எனது/எமது இடர்ப் பொறுப்பின பேரில் பண அனுப்பீட்டைச் செய்ய வங்கிக்குச் சுதந்திரம் உண்டு. அனுப்பீட்டின்போது இடம்பெறக்கூடிய ஏதேனும் இழப்பு, தவறு மற்றும் விடுபடுகை அல்லது அது பெறப்படும்போது ஏற்படும் தவறான விளக்கம் அல்லது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய நாட்டிலுள்ள கிளியரிங் அமைப்பின் ஏதேனும் தாமதம் அல்லது பண அனுப்பீட்டைச் சேகரிப்பதில் பயனடைபவரின் வங்கியின் தரப்பில் இடம்பெறக்கூடிய தவறுகை அல்லது கவனயீனம் என்பவற்றிற்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பாளியாகாது. எந்தச் சூழ்நிலையிலாவது ஏற்படக்கூடிய ஏதேனும் இலாப அல்லது ஒப்பந்த இழப்புகளுக்கு அல்லது விசேட, நேரடியற்ற மற்றும் எதிர்விளைவான இழப்புகள் அல்லது சோதங்களுக்கு வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது. பணனடைபவரின் உண்மைத் தன்மை அல்லது நம்பகத்ன்மையை ஊர்ஜிதம் செய்வதற்கு வங்கி பொறுப்பாகாது. அது வாடிக்கையாளரின்/அனுப்பீடு செய்பவரின் முழுப் பொறுப்பாகும்.

2. குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் எதுவும் இல்லாவிடின், டெலெக்ஸ் மூலமான பண அனுப்பீடானது, கொடுப்பனவு செய்யப்படும் நாட்டின் நாணயத்திலேயே செயற்படுத்தப்படும்.

3. விசேடமாகக் குறிப்பிடப்படாவிட்டால், இலங்கைக்கு வெளியிலான சகல கட்டணங்களும்/தரகுப்பணங்களும் பயனடைபவரின் கணக்கிலேயே பற்று வைக்கப்படும்.

4. நடைமுறைச் சூழ்நிலை தேவைப்படுத்துமாயின், இந்த டெலெக்ஸ் பண அனுப்பீட்டை, அனுப்பீடு செய்பவர் குறிப்பிட்ட இடத்திலிருந்து அல்லாது வேறோர் இடத்திலிருந்து அனுப்பும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

5. அனுப்பீட்டைப் பணமாக மாற்றும் செயற்பாடானது, அந்த மாற்றம் இடம்பெறும் நாட்டின் விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கேற்ப விதிக்கப்பட்ட ஏதேனும் நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகள் அல்லது ஏனைய வரையறைகளுக்கு அமைவாகவே இருக்கும். அத்தகைய விதிகள் மற்றும் பிரமாணங்கள் காரணமாக ஏற்படக்கூடிய

ஏதேனும் இழப்புக்கள் அல்லது தாமதத்திற்கு வங்கியோ, அதன் பிரதிநிதிகளோ அல்லது முகவர்களோ பொறுப்பல்ல.

6. அதே நாள் பெறுமதிக்கான விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட சேரிடம் அமைந்துள்ள புவியியல் பிரதேசம் தொடர்பான காலக்கெடுக்களுக்கு அமைவாக இருக்கும்.

7. விண்ணப்பதாரர் தனது அனுப்பீட்டுத் தொகையை வங்கியிடமிருந்து மீளப்பெற விரும்பினால், வங்கியானது, தனது சுயவிருப்பின் பேரில், சகல அறவீடுகளையும் செலவுகளையும் கழித்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட நாணயத்தின் அப்போதய கொள்வனவு வீதத்தில் அந்த மீளளிப்பை வழங்கும்.

8. காலத்திற்குக் காலம், முன்னறிவித்தல் கொடுக்காமலே, அனுப்பீட்டுக் கட்டணங்களை மாற்றும் உரிமை வங்கிக்கு உண்டு.

9. பணம் தூய்மையாக்கும் மோசடி/சட்ட விரோத கொடுக்கல் வாங்கல்கள் - ஒரு கொடுப்பனவில் ஏதேனுமொரு நாட்டின் சட்டம் அல்லது பிரமாணம் எவரேனும் ஒருவரினால் மீறப்பட்டுள்ளதென வங்கி நம்புமாயின், அக் கொடுப்பனவை வங்கி மறுக்க முடியும். கொடுப்பனவில் சம்பந்தப்பட்டுள்ள நபருக்கு அல்லது அதிகாரசபைக்கு, அது தொடர்பான சட்டம் அல்லது பிரமாணங்கள் குறித்துத் தகவல் அல்லது விளக்கம் தேவைப்படுமானால், அல்லது அந்த நபர் அல்லது அதிகாரசபை கொடுப்பனவைச் செயற்படுத்த மறுத்தால், கொடுப்பனவானது தாமதமடையும் அல்லது மறுக்கப்படும்.

10. வேலை நாட்கள் - காலத்திற்குக் காலம் வங்கிக் கிளைகளினால் அல்லது நிலையங்களினால் அறிவிக்கப்படும் காலக்கெடுக்களுக்குள் வங்கிக்குக் கிடைக்கும் விண்ணப்பங்களைச் செயற்படுத்த, வங்கி தன்னாலியன்ற நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளும். அத்தகைய காலக்கெடுக்களுக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், அடுத்த வேலை நாளில் செயற்படுத்தப்படும். இந்த நோக்கத்திற்காக சகல வங்கி விடுமுறைகளும் வார இறுதி நாட்களும் வேலை செய்யப்படாத நாட்களாகக் கருதப்படும். கொடுப்பனவுத் திகதி ஒரு வங்கி விடுமுறை தினத்தில் நிகழுமாயின், கொடுப்பனவானது அடுத்த வேலை நாளில் மேற்கொள்ளப்படும்.

11. உடன்படிக்கையும் அதிகாரமளிப்பும் - அனுப்பீட்டு விண்ணப்பத்தில் கைச்சாத்திடுவதன் மூலம் நீங்கள் பின்வருவனவற்றை ஒப்புக்கொண்டு உடன்படுகின்றீர்கள்: (அ) நீங்கள் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து விளங்கிக்கொண்டு, அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்க இணங்குகின்றீர்கள். (ஆ) இந்த விண்ணப்பம் தொடர்பாக நீங்கள் ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கிக்கு வழங்கிய சகல தகவல்களும் உண்மையானமை மற்றும் சரியானவை என்று நீங்கள் உறுதிப்படுத்துகின்றீர்கள். (இ) மொத்தக்

கொடுப்பனவு, மற்றும் இந்த நிபந்தனைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள தரகுப்பணம் (இருப்பின்), ஏனைய கட்டணங்கள், செலவுகள், தீர்வைகள் என்பவற்றை இந்த ஆவணத்தின் ''கொடுப்பனவுப் படிவம்'' அல்லது :அறவீடுகள் படிவம்'' பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உங்கள் கணக்கில் பற்று வைக்க நீங்கள் ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றீர்கள். (ஈ) அனுப்பீட்டு விண்ணப்பம் வங்கியினால் செயற்படுத்தப்படுவதற்கு முன்னர், சில சூழ்நிலைகளின் கீழ், நீங்கள் மேலதிக எழுத்துமூல கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டியிருக்கும்.